DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 128/2022 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 6 |
| Name | ராஜசேகரன் |
| Father / Husband Name | சங்கிலி |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 11th July 2023.

---

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை:-**

1) நான் சிவகங்கை கீழப்பூங்குடி கிராமத்தில் குடியிருந்து வருகின்றேன். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் பணிசெய்து பணிஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 03.11.2021ம் தேதி இரவு 09.00 - 10.00 மணியிருக்கும் நானும், சக்திவேல் என்பவரும் விபத்து நடந்த இடத்தில் நின்று கொண்டிருந்த போது சிவகங்கை நகர் காவல் நிலைய போலிசார் எங்கள் இருவரையும் அழைத்து வழக்கு பற்றி எடுத்துக்கூறி எங்கள் முன்னிலையில் தெருவிளக்கு மற்றும் டார்ச் லைட் கொண்டு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததற்கு நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம்.

2) என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் வைத்து எங்கள் முன்னிலையில் தயார் செய்தவை தான். பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் சேர்த்து சக்திவேல் என்பவரும் 2 வதாக சாட்சி கையொப்பம் செய்தார். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

1) விபத்து நடந்த இடத்திற்கு எத்தனை நாட்கள் கழித்து போலிசார் வந்தனர் என்றால் அன்று இரவே 10.00 மணிக்கு வந்தார்கள். நான் வசிப்பது கீழப்பூங்குடி என்றால் சரிதான். எனது ஊருக்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 3 1/2 கி.மீ. தூரம். நான் என்ன காரணத்திற்காக சம்பவ இடத்திற்கு வந்தேன் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் விபத்து நடந்த இடத்தை பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் போயிருந்தேன்.

2) நான் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 1/2 மணி நேரம் முன்னதாக சென்றேன். இந்த விபத்தில் இறந்தவர், காயம்பட்டவர் என் உறவினர் என்றால் சரிதான். விபத்து நடந்த உடனே மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள் என்றாலும், நான் சென்ற போது யாரும் அங்கு இல்லை என்றாலும் சரிதான். நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. இறந்த நபர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

(ஓம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 11.07.2023
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**